செய்தி வெளியீடு எண்:561 நாள் : 06.11.2014

வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் வடகிழக்குப் பருவமழையினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அரசின் சார்பில், போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப்பணிகள் குறித்தும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்கள் இன்று (06.11.2014) வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக வளாகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், வருவாய்த்துறை செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் / மாநில நிவாரண ஆணையர் முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் / நில நிருவாக ஆணையர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / நில சீர்திருத்த ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன் இ.ஆ.ப., வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் முனைவர் மு. ஜெயராமன் இ.ஆ.ப., நகர்புற நிலவரி மற்றும் நில உச்சவரம்பு துறையின் ஆணையர் திரு. பி. அண்ணாமலை இ.ஆ.ப., நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் திருமதி ஆர். வாசுகி இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் திருமதி. ஆர். லில்லி இ.ஆ.ப., நில நிருவாக இணை ஆணையர் திரு. கே.எஸ். கந்தசாமி இ.ஆ.ப., நில சீர்திருத்த இயக்குநர் திருமதி வி.கலையரசி இ.ஆ.ப., மற்றும் பலர் உடனிருந்தனர்.

இக்கூட்டத்தில், வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களான, அம்மா திட்டம், விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கிடும் திட்டம், விலையில்லா கிரைண்டர், மிக்சி மற்றும் மின்விசிறிகள் வழங்கிடும் திட்டம், இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல், விரைவுப் பட்டா மாறுதல் திட்டம், ஏறத்தாழ 4200 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் அனைத்து வகையான ஓய்வூதியத் திட்டங்கள், வருவாய்த் துறைக்கான புதிய கட்டடங்கள், ஆக்கிரமணங்களை அகற்றுதல், நில ஆவணங்களை கணினி மயமாக்கிடும் திட்டம், ஆகியவை குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள்.

குறிப்பாக, வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், தமிழக அரசின் சார்பில், போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்மட்ட அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டத்தில், இப்பருவ மழையினால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கான நிவாரண உதவிகள், பலியான கால்நடைகளுக்கான நிவாரன உதவிகள், முழுமையாகவும், பகுதியாகவும் சேதமடைந்துள்ள குடிசைகளுக்கான நிவாரண உதவிகள் உள்ளிட்ட பல்வேறு நிவாரணப்பணிகள் குறித்தும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள்.

இறுதியாக, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் மாவட்ட ஆட்சியர்களுடன் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், வருவாய்த்துறை செயலர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் ஆகியோர் ஆய்வு செய்தார்கள். மேலும் இது போன்ற பருவமழைக் காலங்களில் ஏற்படும் கனமழை, புயல் மற்றும் வெள்ளம் ஆகிய இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ள அனைத்து அரசு துறைகளின் ஒத்துழைப்போடு மாவட்ட நிருவாகம் தயார் நிலையில் இருக்குமாறு கேட்டுக்கொண்டார்கள்.

வருவாய்த்துறை செயலர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9